DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.5**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | நியாஸ் கான் |
| Father Name | : | அப்துல் ரகீம் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2025.

( 2வது எதிரி ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது மேலூரில் குடியிருக்கிறேன். நான் கட்டுமான தொழில் செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 ராமகிருஷ்ணனை தெரியும். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து இரவு போன் மூலம் தகவல் கிடைத்தது. நான் மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 ராமகிருஷ்ணனை பார்த்தேன். எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி என்று குறிப்பிட்டுள்ளதற்கு கீழ் காணப்படுவது என்னுடைய கையொப்பம் தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 22.11.2015 ம் தேதி எனது நண்பர் அ.சா.1 ராமகிருஷ்ணன் காயம்பட்டு அப்போலோ மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையிலிருந்த போது புதூர் காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் திருமதி.சுஜாதா அவர்கள் ராமகிருஷ்ணனிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அந்த வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.